330

பிரபஞ்ச ஜோதி பிரசுரம்-19

# பிரஜைகளின்

## உரிமைகளும் கடமைகளும்

OFFICE OF THE ...
30 JUL 1949
MADRAS

எழுதியவர்:

வெ. சாமிநாத சர்மா

இதில் பிரஜைகளின் லட்சணங்களென்ன, உரிமை, உரிமையென்று சொல்கிறார்களே அதன் சரித்திரமென்ன, ஜன ஆட்சியின்கீழ் வாழும் பிரஜைகளின் உரிமைகளென்ன, கடமைகளென்ன இவையலவும் எல்லோருக்கும் விளங்குகிற முறையில் கூறப்பட்டிருக்கின்றன. அரசியலில் சிரத்தை கொள்ள விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது.

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்
சென்னை :: புதுக்கோட்டை

W
N49
112515

# இந் நூலாசிரியரின்

## சமீப வெளியீடுகள்

**அரசியல் வரலாறு**

ஒரே மனிதன் குடும்பத்தில் எஜமானனு யிருக்கிருன்; காரியாலயத்தில் ஊழியனுயிருக்கிருன்; சமுதாயத்தில் பிரஜையாயிருக்கிருன்; இப்படி ஒவ்வொரு துறையிலும் இவன் ஆற்றவேண்டிய கடமைகளும் உண்டு; அனுபவிக்க வேண்டிய உரிமைகளுமுண்டு. இந்த இரண்டினையும் வலியுறுத்திக் காட்டுவது அரசியல் சாஸ்திரம். இந்த சாஸ்திரத்தின் பல கூறுகளையும் சுருக்கமாகச் சொல்வது இந்த நூல்.

**கார்ல் மார்க்ஸ் (2-ம் பதிப்பு)**

கார்ல் மார்க்ஸ் ஒரு சிந்தனையாளன் மட்டுமல்ல; தீர்க்கதரிசியுங்கூட. இவனுடைய வாழ்க்கை துன்பமயமாயிருந்தது. இந்தத் துன்பச் சூழலின் மத்தியில் தான் இவன்பொதுவுடைமைத்தத்துவம் அனுஷ்டான சாத்தியமானதென்று நிர்த்தாரணம் செய்திருக்கிருன். இவனுடைய வாழ்க்கை வரலாறு இந்த நூலில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

**ஸ்ரீ ராமகிருஷ்ணர்—ஒரு தீர்க்கதரிசி**

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சத்தியத்தின் பிரதிநிதி. எப்படி சத்தியமானது இடத்திற்கும் காலத்திற்கும் கட்டுப் படாததோ அப்படியே இந்தத் தற்கால முனிவர் காலத்தினுலும் இடத்தினுலும் வரையறுக்கப்படாதவர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாழ்க்கை வரலாறுகளை தேசத்தோடு பிணைத்து உணர்ச்சி ததும்பிய நடையில் ஆசிரியர் விவரித்திருக்கிருர்.

**மானிட ஜாதியின் சுதந்திரம் (4-ம் பதிப்பு)**

இங்கர்ஸாலின் அரிய பிரசங்கங்களில் இது ஒன்று. இவனுடைய நாவன்மையை சுவாமி விவேகானந்தரே புகழ்ந்திருக்கிருர்.

கிடைக்குமிடம் :- **பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்**
புதுக்கோட்டை திருச்சி ஜில்லா

பிரபஞ்ச ஜோதி பிரசுரம் - 19

# பிரஜைகளின்
# உரிமைகளும் கடமைகளும்

OFFICE OF THE ...
30 JUL 1949
MADRAS

★

எழுதியது:
வெ. சாமிநாத சர்மா

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்
சென்னை :: புதுக்கோட்டை

முதற் பதிப்பு: மே 1949
உரிமை பதிவு பெற்றது

W
NH9

Sales & Distribution

PRAPANCHA JYOTHI PRACHURALAYAM

PUDUKKOTTAI :: (TRICHY DIST.)

Editorial

12 Sir Mohamed Usman Road

Thyagarayanagar

MADRAS 17.

விலை அணு எட்டு

TAMIL NADU ARCHIVES ...
112515

PRINTED AT THE JANAKI PRINTING & BINDING WORKS
PUDUKKOTTAI

# 1. பிரஜைகளின் லட்சணம்

ஒருவர் ஆட்சி, ஒரு சிலர் ஆட்சி, பலர் ஆட்சி ஆகிய இந்த மூன்று வகை ஆட்சி முறைகளுக்குட் பட்டிருக்கும் வயது வந்த எல்லா ஜனங்களேயும் பொதுவாக பிரஜைகள் என்ற பெயரிட்டே அழைக் கிறோம். எல்லோருக்கும் புரிகிற மாதிரி, தெரிந்த வார்த்தையில் சொல்லவேண்டு மென்பதற்காகவே இப்படி அழைக்கிறோம். சரியாகச் சொல்லப்போனல், ஜன ஆட்சி முறைக்குட்பட்டிருப்பவர்கள்தான் பிரஜைகள்; அவர்களைத்தான் பிரஜைகள் என்று அழைக்கவேண்டும். எப்படியென்று விசாரிப்போம்.

பிரஜா பாத்தியதை, பிரஜா உரிமை, பிரஜா அந் தஸ்து, பிரஜா சக்தி என்றெல்லாம் சொல்கிறோம். இதனல், பிரஜையா யிருப்பவருக்கு, பாத்தியதை, உரிமை, அந்தஸ்து, சக்தி ஆகிய இவை யாவுமோ அல்லது இவற்றில் ஏதேனுமொன்றோ உண்டு என் பது தெளிவாகிறது. இந்த பாத்தியதை அல்லது உரிமை அல்லது அந்தஸ்து அல்லது சக்தி, ஒருவர் ஆட்சி என்று அழைக்கப்படுகிற மன்னராட்சிக்குட் பட்டிருக்கும் மக்களுக்கோ, ஒரு சிலர் ஆட்சி என்று அழைக்கப்படுகிற பிரபுத்துவ ஆட்சிக்குட்பட்டிருக் கும் மக்களுக்கோ உண்டா? இல்லவே இல்லை. இவர்களுக்கு ஆளுகையில் எவ்வித பாத்தியதையும் கிடையாது. தங்களுடைய உரிமையென்று சொல்லிக் கொண்டு எவ்வித உரிமையையும் இவர்கள் கொண் டாட முடியாது. ஆளுகின்றவர்களைக் காட்டிலும் இவர்களுக்குத் தாழ்வான அந்தஸ்தே தவிர சம அந் தஸ்து இல்லை. இந்த நிலைமையில் இவர்களுக்கு, தனிப் பட்ட ஒரு சக்தி, ஆளுகின்றவர்களால் மதிக்கப்படக் கூடிய ஒரு சக்தி எப்படி இருக்கமுடியும்? நிச்சய மாக இல்லை. சுருக்கமாக, இவர்கள் வேறாகவும், இவர் களை ஆளுகின்றவர்கள் வேறாகவும் இருக்கிறார்கள்;

நோக்குநிலை முதல் வாழ்க்கைப் போக்கு வரையில் யாவுமே வேறு வேருக இருக்கின்றன. ஆளுகின்றவர்களுக்கு எல்லா வகையிலும் அடங்கி நடப்பது, தங்கள் கடமையென்று இவர்கள் கருதுகிருர்கள். அப்படியே ஆளுகின்றவர்களும், இவர்களை எல்லா வகையிலும் அடக்கி நடத்துவது தங்கள் உரிமையென்று கருதுகிருர்கள். ஜனங்களைப்பற்றி ஆளுகின்றவர்களுக்கு அக்கரை இருப்பதில்லை. இதே பிரகாரம் ஜனங்களுக்கு ஆளுகையில் சிரத்தை இருப்பதில்லை. இந்த சிரத்தை ஏற்படக்கூடாதென்பதுதான் ஆளுகின்றவர்களுடைய கவலை. இதற்காக இவர்களுடைய — ஜனங்களுடைய — கவனத்தை வேறு வேறு வழிகளில் திருப்பிவிடுகிருர்கள். ஜனங்களும் இந்த வழிகளில் ஈடுபட்டு, சுய நிலையை இழந்து, ஆட்பட்டிருப்பதிலே திருப்தியடைகிருர்கள். ஆட்பட்டிருப்பதுதான் தங்கள் கடமை யென்ற உணர்ச்சி இவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது.

இப்படி யெல்லாம் நாம் கூறுவதனல், மன்னராட்சியென்கிற முடியாட்சியின்கீழோ, பிரபுத்துவ ஆட்சியென்கிற மேன்மக்களாட்சியின் கீழோ வாழும் மக்கள் நன்மையே அடைய முடியாதா என்று நீங்கள் கேட்கலாம். நன்மை யடையலாம்; சுகப்படலாம்; வாழ்க்கையை இன்பகரமாக நடத்தலாம். ஆனல் இந்த நன்மை, சுகம், இன்பம் ஆகிய யாவும் ஆளுகின்றவர்களுடைய தயவைப் பொறுத்தனவாகவே இருக்கும்; உரிமையினின்று பிறந்தனவாயிரா. இரண்டுக்கும் எவ்வளவு வித்தியாசமென்ருல், கடையிலே வாங்கித் தின்கிற பலகாரத்திற்கும், வீட்டிலே செய்து தின்கிற பலகாரத்திற்கும் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம் என்று சொல்லலாம்.

ஜன ஆட்சிக்குட்பட்டிருக்கும் மக்களோ, ஆளுகையில் பாத்தியதை கொண்டாடுகிறவர்களா யிருக்கிருர்கள்; ஆளுகின்றவர்களைத் தெரிந்தெடுக்கிற உரிமையுடையவர்களா யிருக்கிருர்கள்; சுய அந்தஸ்

தும், அதே சமயத்தில் சம அந்தஸ்தும் பெற்றவர்களா யிருக்கிறார்கள்; ஆளுகின்றவர்கள், ஆளுங்கடமை யைச் சரிவரச் செய்யாவிட்டால், அவர்களுக்கு அந்தக் கடமையை உணர்த்தும் சக்தி வாய்ந்தவர் களா யிருக்கிறார்கள்.

மற்ற ஆட்சி முறைகளின்கீழ் வாழும் மக்களைப் போல், இந்த ஜன ஆட்சிக்குட்பட்டிருப்பவர்களும். அரசாங்கம் பிறப்பிக்கிற உத்திரவுகளுக்கும், அமுலுக் குக் கொண்டுவருகிற சட்ட திட்டங்களுக்கும் கீழ்ப் படியத்தானே செய்கிறார்கள் என்று நீங்கள் கேட்க லாம். வாஸ்தவம்; கீழ்ப்படியத்தான் செய்கிறார்கள். ஆனால் அந்த உத்திரவுகளைப் பிறப்பிப்பதிலும், சட்ட திட்டங்களை இயற்றுவதிலும் இவர்களுக்குப் பங்கு உண்டு. அதாவது தாங்கள் பிறப்பிக்கிற உத்திரவு களுக்கும், இயற்றுகிற சட்டதிட்டங்களுக்கும், தாங் களே கீழ்ப்படிகிறார்கள். இப்படிக் கீழ்ப்படிவது சுயேச்சையாகவே தவிர, யாருடைய கட்டாயத்திற் காகவுமன்று; யாருக்குப் பயந்துமன்று. இதை நாம் நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

மற்றைய ஆட்சி முறைகளுக்குட்பட்டிருப்பவர் களுக்கும், இந்த ஜன ஆட்சி முறைக்குட்பட்டிருப் பவர்களுக்குமுள்ள முக்கியமான வித்தியாசங்கள் என்னென்னவென்றால், முந்தியவர்கள், பிறருக்கு ஆட்பட்டவர்களா யிருக்கிறார்கள்; பிந்தியவர்கள், தங்களுக்குத் தாங்களே ஆட்பட்டவர்களா யிருக் கிறார்கள். முந்தியவர்கள் ஆட்பட்டிருப்பது, அவர் களுடைய விருப்பத்தினாலல்ல; ஏன், அவர்களுடைய விருப்பத்திற்கு விரோதமாகக்கூட என்று சொல்ல லாம்; பிந்தியவர்கள் ஆட்பட்டிருப்பதோ, அவர்களு டைய விருப்பத்தினால்; அவர்களே சம்மதித்து. முந்தியவர்கள், ஆட்படுங் கடமையை மட்டுந்தான் அறிவார்கள்; பிந்தியவர்கள், ஆளும் உரிமையையும். ஆட்படுங் கடமையையும், இரண்டினையும் அறிவார் கள். முந்தியவர்கள், தங்கள் நலத்தை மற்றவர்கள் வசம் ஒப்புவித்துவிடுகிறார்கள்; பிந்தியவர்கள், தங்கள்

நலத்தைத் தாங்களே நிர்ணயித்துக்கொண்டு, அதைக் காப்பாற்றி வருவதில் கண்ணுங்கருத்துமாயிருக்கிறார்கள். சுருக்கமாக, முந்தியவர்கள், சொந்த நிலத்தை குத்தகைக்கு விட்டிருக்கிறவர்கள் மாதிரி; பிந்தியவர்கள், சொந்தப் பயிர் வைத்து நடத்துகிறவர்கள் மாதிரி.

ஆக, ஜன ஆட்சிக்குட்பட்டிருக்கும் வயது வந்த ஜனங்கள், தங்களுக்குத் தாங்களே எஜமானர்களாயிருக்கிறார்கள்; ஆளும் உரிமையை அனுபவிக்கிறவர்களாகவும், அதே சமயத்தில் ஆட்படுங்கடமையைச் செய்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள்தான், பிரஜைகள் என்று அழைக்கப்படுவதற்குரியவர்கள். முழுப் பிரஜைகளென்று சொன்னால் இவர்களுக்குத்தான் பொருந்தும். மற்ற ஆட்சி முறைகளுக்குட்பட்டிருப்பவர்களை, பிரஜைகளென்று அழைப்பது ஒரு சம்பிரதாயமென்றே சொல்ல வேண்டும்.

பிரஜையாயிருப்பது ஓர் உரிமை; ஓர் அந்தஸ்து; பொறுப்புள்ள ஒரு பதவியென்றுகூடச் சொல்லலாம். வயது வந்ததிலிருந்து, அதாவது பதினெட்டு வயதோ இருபத்தோரு வயதோ ஆனதிலிருந்து, ஆயுள் பூராவும் ஒருவனோ ஒருத்தியோ வகித்து வரவேண்டிய பதவி இது. ஆனால் இதற்கு ஊதியம் கிடையாது. ஒரு பிரஜை, ஆளும் உரிமையை அனுபவிக்கிற காலத்தில்தான் ஏதேனும் ஒரு தொகையைச் சம்பளமாக எதிர்பார்க்கலாம். ஆட்படுங்கடமையைச் செய்துகொண்டு வருகிறபோது, அந்தக் கடமையை ஒழுங்காகச் செய்து வருவதிலே உண்டாகிற திருப்திதான் சம்பளம்.

ஒரு பிரஜை, சம்பளமாக ஒரு தொகையைப் பெற்று ஆளுந் தொழிலைச் செய்துவருகிற காலத்தில், அந்தப் பிரஜையை, மந்திரியென்றும், உத்தியோகஸ்தரென்றும், இப்படிப் பலவாறாக அழைக்கிறோம். அதே பிரஜை, ஆளுந்தொழிலைச் செய்வதிலிருந்து விலகி, ஆட்படுங்கடமையைச் செய்து வருகிற காலத்

தில் அவரை வெறும் பிரஜையென்றுதான் அழைக்கிறோம். இப்படி வெறும் பிரஜையாயிருக்கிற காரணத்தினால், அவருடைய பொறுப்போ, கௌரவமோ சிறிதும் குறையவில்லை யென்பது இங்கு நினைவில் வைத்துக்கொள்ளத்தக்கது. ஆளும்போது அதிகாரி; ஆட்படும்போது பிரஜை; அவ்வளவுதான்.

ஆளும் அதிகாரி, தனது ஆளுந்தொழிலைச் சரிவரச் செய்யாவிட்டால், அந்தஅதிகாரிக்கு மட்டுமோ, அந்த அதிகாரியைச் சேர்ந்த ஒரு சிலருக்கு மட்டுமோ கெடுதல் உண்டாகிறது. அந்தக் கெடுதலைச் சொற்ப காலத்திற்குள் திருத்திக்கொண்டுவிட முடியும். ஆட்படும் பிரஜை, தனது கடமையை ஒழுங்காகச் செய்துவராவிட்டாலோ, நாடு பூராவுமே பாழாகிவிடக்கூடும்; சமுதாய உடலில் மாறாத வடு ஏற்பட்டுவிடக்கூடும். அப்படியானால் ஒரு பிரஜையினுடைய பொறுப்பு எவ்வளவு மகத்தானது?

இப்படி மகத்தான பொறுப்பை நிறைவேற்ற வேண்டிய பிரஜை எப்படிப்பட்டவனா யிருக்கவேண்டும், அவனுடைய லட்சணங்கள் என்னென்ன என்று நீங்கள் கேட்கிறீர்களல்லவா? முதலாவது, அவன், சொந்த நாட்டிலே பிறந்து, வளர்ந்து, வசிக்கிறவனா யிருக்கவேண்டும். அப்பொழுதுதான் அவன், தன்னுடைய நாட்டின் நலத்தில் நாட்டமுடையவனா யிருக்கமுடியும்; தனது அரசாங்கத்தினிடத்தில் விசுவாசமுடையவனா யிருக்கமுடியும். இருக்க முடியும் என்ன, இருக்கவே வேண்டும். எவனொருவன், தனது நாட்டின் நன்மைக்காக நாளும் உழைத்து வருகிறானோ, தனது அரசாங்கத்தின் நற்பெயருக்குக் கேடு உண்டாகாமல் நடந்துவருகிறானோ அவன்தான் உண்மையான பிரஜையென்று கூறலாம்.

அப்படியானால் ஒரு நாட்டிலே வசிக்கும் அந்நியர்களுடைய நிலைமை என்ன? அவர்கள் பிரஜைகளல்லர். அவர்களுக்கு ஓட்டுரிமை முதலிய அரசியல் உரிமைகள் கிடையாது. முற்காலத்தில், நேர்முகமான ஜன ஆட்சி நடைபெற்று வந்த கிரீஸ்

தேசத்தில், கிரேக்கரல்லாதவர்களுக்குப் பிரஜா உரிமை கிடையாதென்பதே சட்டமாயிருந்துவந்தது. இப்பொழுதும் பெரும்பாலான நாடுகளில் இதுவே விதியாயிருந்துவருகிறது.

இரண்டாவது, பதினெட்டு வயதோ இருபத்தோரு வயதோ அடைந்தவர்கள்தான் பிரஜைகள்.

இவையிரண்டும் பிரஜைகளின் பொதுவான, முக்கியமான லட்சணங்கள். இவை மட்டும் இருந்தால் போதுமா? சில சில அவலட்சணங்களும் இல்லாமல் இருக்கவேண்டும். இந்த அவலட்சணங்கள் என்னென்னவென்பது, அதாவது பிரஜையாயிருப்பதற்குத் தகுதியில்லாத தன்மைகள் என்னென்னவென்பது, ஒவ்வொரு நாட்டு அரசியல் திட்டத்திலும் ஒவ்வொருவிதமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சில நாடுகளில், பைத்தியம் பிடித்துப் போனவர்கள், குற்றஞ் செய்து சிறைப்பட்டவர்கள், இப்படிப்பட்டவர்களுக்குப் பிரஜா உரிமை கிடையாது. இன்னுஞ் சில நாடுகளில், குருடர், செவிடர், ஊமையர் இப்படிப்பட்டவர்களுக்குப் பிரஜா உரிமை கிடையாது. வேறு சில நாடுகளில், வாங்கின கடனைத் திருப்பிக்கொடுக்கச் சக்தியற்றவர்களென்று கோர்ட்டுகளினால் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள், வேறு ஏதேனும் காரணங்களிருந்து அந்தக் காரணங்களுக்காகப் பிரஜா உரிமையை அனுபவிக்கத் தகுதியற்றவர்களென்று கோர்ட்டுகளினால் உத்திரவிடப் பெற்றவர்கள், இப்படிப்பட்டவர்களுக்குப் பிரஜா உரிமை கிடையாது. ஆக, பிறர் உதவியின்றி, தன்னுதவியினாலேயே காரியங்களைச் செய்யக்கூடியவன், ஒழுங்கான முறையில் வாழ்க்கையை நடத்தக்கூடியவன் எவனோ அவன்தான் சரியான பிரஜை.

எனவே, மேற்சொன்ன லட்சணங்களோடு கூடிய, அவலட்சணங்கள் இல்லாத, ஒரு நாட்டில் வசிக்கும் சகலமான பேரும் பிரஜைகளே. இதில் பால், நிறம், மதம், வகுப்பு முதலிய எந்த விதமான வித்தியாசங்களும் கிடையாது.

எப்படிப்பட்டவர்கள் பிரஜைகள் என்பதைப் பற்றிச் சில அறிஞர்கள் கூறிய கருத்துக்களைக் கேளுங்கள் :—

> "எவனொருவன், தேசத்தினுடைய அரசாங்கத்தில் பங்குடையவனாயிருக்கிறானோ, அந்த அரசாங்கத்தினால் ஏற்படக்கூடிய கௌரவங்களை அனுபவிக்கும் உரிமையுடையவனா யிருக்கிறானோ அவன்தான் பிரஜை."

* * *

> "பிரஜைகளென்போர், ஒரு ஜன சமுதாயத்தின் அங்கத்தினர்கள்; அந்தச் சமுதாயத்திற்குச் சில கடமைகளினால் கட்டுப்பட்டவர்கள்; அந்தச் சமுதாயத்தின் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள்; அந்தச் சமுதாயத்தினால் உண்டாகிற அனுகூலங்களில் சம பங்கு பெறுபவர்கள்."

* * *

> "ஒரு ராஜ்யத்தின் அங்கத்தினன்; அந்த ராஜ்யத்திற்குட்பட்டு, தான் பூரண வளர்ச்சி பெற முயற்சி செய்கிறவன்; அதே சமயத்தில் ஒரு சமுதாயத்திற்குச் சீலமே பெரிதென அறிந்து, அந்தச் சமுதாய சீலத்தை நாடுகிறவன்; அவன்தான் பிரஜை."

ஒரு பிரஜை, சொந்த வாழ்க்கையில் சுதந்திரமுடையவன்; சமுதாய வாழ்க்கையில் எல்லோருக்கும் சகோதரன்; அரசியல் வாழ்க்கையிலோ எல்லோருடனும் சம பங்காளி. ஆகவே ஒரு பிரஜையினுடைய மொத்த வாழ்க்கை சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம் ஆகிய மூன்று அடித்தளங்களைக் கொண்டதாயிருக்கிறது.

ஆட்படும் கடமையை மட்டும் செய்துகொண்டு வந்த ஜனங்கள், எப்பொழுதிருந்து, ஆளும் உரிமையை அனுபவிக்கக்கூடிய பிரஜைகளானார்கள்?

அதாவது ஜனநிக்கம் அல்லது பிரஜாதிபத்தியம் என்பது எப்பொழுது ஏற்பட்டது? எல்லாம் பதினெட்டாம் நூற்றுண்டின் கடைசி பகுதியிலிருந்துதான். அதற்கு முந்தி, உலகத்தின் பெரும்பாலான நாடுகளில், சமுதாயத்தின் சாதாரண நிலையிலிருந்த ஜனங்களுக்கு எந்த விதத்திலும் சம்பந்தமில்லாத ஏதோ ஒருவித ஆட்சி முறையே நிலவி வந்தது. இந்த ஆட்சி முறை சில சில நாடுகளில், சிறப்பாகக் கீழ் நாடுகளில், ஜனங்களுக்கு அனுகூலமா யிருந்திருக்கலாம்; அப்படி அனுகூலமாயிருந்ததும் சில சில காலங்களுக்குத்தான். பொதுவாக ஜனங்களுக்கு அரசுரிமை மறுக்கப் பட்டே வந்திருக்கிறது. அரசாங்கத்திற்காக ஜனங்களே தவிர, ஜனங்களுக்காக அரசாங்கம் இல்லையென்பதுதான் பொதுவான கொள்கையா யிருந்து வந்தது.

அரசுரிமை இல்லாதிருந்தது ஒருபுறமிருக்கட்டும்; மனிதராகப் பிறந்துவிட்ட காரணத்தினல், மனிதராக வாழவேண்டியதற்கான சில உரிமைகள் உண்டல்லவா, அந்த உரிமைகள்கூட ஜனங்களுக்கு இல்லாமலிருந்தன. சுருக்கமாக, ஜனங்கள், மனிதர்களாகக் கருதப்படவில்லை; ஆளுகை நடத்துவோரின் ஆடற் கருவிகளாகவே கருதப்பட்டனர்; அப்படியே நடத்தவும் பட்டனர். இதை நிரூபிக்க, மேனட்டுச் சரித்திரத்திலிருந்து பல உதாரணங்களை எடுத்துக் காட்டலாம். ஆனல் இங்கே அது தேவையில்லை. இங்ஙனம் ஜனங்களுடைய பொறுமை, பல தடவை பரிசோதிக்கப்பட்டு வந்த காலத்தில், சில அறிஞர்கள் தோன்றி, ஜனங்களுக்கு உரிமை யுணர்ச்சியை ஊட்டினர்கள். இவர்களில் முக்கியமாக ரூஸ்ஸோ[1] என்பவனைக் குறிப்பிடவேண்டும். இவனுடைய வாழ்க்கை வரலாறும், இவனுடைய எழுத்துக்களும், இன்றளவும் சுதந்திர பாதைக்கு வழி காட்டும் விளக்குகளாக எரிந்துகொண்டிருக்கின்றன.

---

[1] Rousseau 1712–1778.

உரிமை யுணர்ச்சி ஊட்டப்பெற்ற ஜனங்கள், அந்த உரிமையை நிலைநாட்டிக்கொள்ள முயற்சி செய்தார்கள். இந்த முயற்சி, பல இடங்களில் புரட்சிகளாகத் தோன்றின. இவற்றுள், 1774-ம் வருஷம் அமெரிக்காவில் நடைபெற்ற புரட்சியையும், 1789-ம் வருஷம் பிரான்சில் நடைபெற்ற புரட்சியையும் முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். ஏனென்றால் இந்தப் புரட்சிகளின் விளைவாகத்தான், ஜனங்களுக்கும் சில உரிமைகள், அதாவது மனித உரிமைகள் உண்டென்பது அங்கீகரிக்கப்பட்டது. இந்த உரிமைகளின் தொடர்ச்சியாக அரசியல் உரிமைகளையும் பெற்றார்கள் ஜனங்கள்.

எந்த வகையில் ஜனங்களுடைய உரிமைகள் அங்கீகாரம் பெற்றன என்பதை வாசகர்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு, 1776-ம் வருஷம் வெளியான அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனத்திலிருந்து சில வாசகங்களை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்:—

> "மனிதர்கள் பிறக்கும்போதே, கடவுளால் அருளப்பட்ட சில உரிமைகளுடன் பிறக்கிறார்கள். இந்த உரிமைகள் பராதீனப் படுத்த முடியாதவை. இவற்றில் சில என்னவென்றால், உயிர்வாழும் உரிமை, சுதந்திரமாயிருக்கும் உரிமை, சந்தோஷத்தை அனுபவிக்கும் உரிமை முதலியனவாம். இந்த உரிமைகளை மனிதர்கள் அனுபவிக்க வேண்டுமென்பதற்காகவே, அரசாங்கங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. இந்த அரசாங்கங்கள் செலுத்துகிற நியாயமான அதிகாரங்கள் யாவும் ஜனங்களிடமிருந்து பிறப்பவையே."

எனவே, ஜன உரிமைக்கு ஆக்கம் ஏற்பட்டதெல்லாம் சுமார் நூற்றெழுபத்தைந்து வருஷங்களுக்கு மேல் இருநூறு வருஷங்களுக்குள்ளாகத்தான் என்பது தெளிவாகிறது.

## 2. உரிமையின் சரித்திரம்

உரிமை, உரிமையென்று கூறுகிறீர்களே, அதன் அர்த்தமென்ன? அதன் சரித்திரமென்ன? இவையல்லவோ உங்களுடைய கேள்விகள்? கேளுங்கள். உரிமையின் அர்த்தத்தையும் சரித்திரத்தையும் பற்றித் தெரிந்துகொள்வதற்கு முன்னர், உரிமையைப் பற்றின சில அடிப்படையான உண்மைகளைத் தெரிந்துகொள்வோம்.

மனிதன், எப்படி பிறக்கிறபோது சில அங்க அவயவங்களுடன் பிறக்கிறானோ அப்படியே சில உரிமைகளோடும் பிறக்கிறான். அங்க அவயவங்களில்லாமற்போனால் அவன் எப்படி சரியான மனிதன் இல்லையோ, அப்படியே, உரிமைகளில்லாமற் போனாலும் அவன் சரியான மனிதன் இல்லை. என்ன வித்தியாசமென்றால், அங்க அவயவங்கள், கண்களுக்கு நன்றாகத் தெரிகின்றன; உரிமைகள் தெரிவதில்லை. அதாவது முன்னவை ஸ்தூலமாயிருக்கின்றன; பின்னவை சூட்சுமமாயிருக்கின்றன. சூட்சுமமாயிருந்தாலும் இவையின்றி அங்க அவயவங்கள் இருந்து பிரயோஜனமில்லை. ஏனென்றால் இஷ்டப்படிக்கு அங்க அவயவங்களை உபயோகப் படுத்த முடியாதல்லவா? எனவே, மனிதன், மனிதனாக வாழ வேண்டுமானால்? அவனுக்கு உரிமைகள் அவசியம்.

இந்த உரிமைகளை அவனிடமிருந்து பிரிக்கமுடியாது. உன்னுடைய நிறம் சிவப்பு; என்னுடைய நிறம் கறுப்பு. உன்னுடைய நிறத்தை உன்னிடமிருந்தோ, என்னுடைய நிறத்தை என்னிடமிருந்தோ பிரிக்க முடியுமா? முடியாது. அப்படியே உன்னுடைய நிறத்தை எனக்கோ, என்னுடைய நிறத்தை உனக்கோ மாற்றிக்கொள்ள முடியுமா? அதுவும் முடியாது. அது போலவே, மனிதனிடமிருந்து உரிமையைப் பிரிக்கமுடியாது; அதை வேறொருவருக்கு மாற்றிவிடவும் முடியாது. மனிதனிடமிருந்து பிரிக்க

முடியாதது எதுவோ, மற்றவருக்குப் பராதீனப் படுத்த முடியாதது எதுவோ அதுதான் உரிமை.

இப்படிப் பிரிக்க முடியாத ஒன்றை, மற்ற வருக்குப் பராதீனப்படுத்த முடியாத ஒன்றை, ஒரு வன், தெரிந்தோ, தெரியாமலோ, பயத்தினலோ, கட்டாயத்திற்காகவோ, வேருெருவரிடம் ஒப்படைத்து விடுகிருனென்று வைத்துக் கொள்ளுங்கள். அவனை எப்படி மனிதன் என்று அழைக்க முடியும்? அவன் மனிதனே இல்லாதபோது அவன் மனிதனுக எப்படி வாழ முடியும்? முந்தின அத்தியாயத்தில் சொல்லப் பெற்ற அறிஞன் ரூஸ்ஸோ ஓரிடத்தில் கூறுகிருன்:—

> "ஒரு மனிதன், தன்னுடைய சுதந்திரத்தைத் துறந்து விட்டானென்று சொன்னல், அவன், தன்னுடைய மனிதத் தன்மையையும் துறந்து விட்டானென்பது தான் அர்த்தம். அதுமட்டுமல்ல; மானிட சமூகத்தின் ஓர் அமிசத்தினன் என்ற முறையில் அவனுக்கு ஏற்பட்டிருக்கிற உரிமைகளையும் கடமைகளையுங்கூடத் துறந்து விட்டான் என்று கொள்ளவேண்டும். அவனிடத்தில் எந்த விதமான நற்குணங்களையும் கொண்டு புகுத்தி அவனுடைய மனிதத் தன்மையை நிரப்ப முடியாது. சுருக்கமாகச் சொல்லப்போனல் அவன் மனிதனேயல்ல."

உரிமை, நல்லதொன்றையே சுபாவமாகவுடையது; நல்லதொன்றையே நாட்டமாகவுடையது. மனிதன் நல்லவனுக இருக்கவேண்டும், நல்லதைச் செய்யவேண்டும், பிறரையும் நல்வழிப் படுத்தவேண்டும் என்பதற்காகவே, இந்த உரிமை அவனேடு பிறந்து அவனேடு வளர்கிறது.

உரிமை, எப்பொழுதும் சுறு சுறுப்பாயிருக்கிற சுபாவமுடையது. இதற்குச் சும்மாயிருக்கத் தெரியாது. சும்மாயிருப்பது உரிமையல்ல. இதனுடைய சுறுசுறுப்பானது, மனிதனிடத்தில் நல்ல தன்மையை வளர்ப்பதோடல்லாமல், அவனிடத்தில் கெட்ட

தன்மை வந்து புகா வண்ணமும் தடுக்கிறது. எனவே இந்த உரிமையை ஒரு சக்தியென்றும், ஒரு சாதன மென்றும் சொல்லலாம். இந்தச் சக்தியோ சாதனமோ இல்லாத மனிதன் அழுகிப்போன பழம் மாதிரி. இப்படிச் சக்தியாகவும் சாதனமாகவும் இருந்தபோதிலும் இந்த உரிமைக்கு எல்லையுண்டு. எல்லை மீறிச்செல்வது உரிமையல்ல.

உரிமையானது, தனித்து இருப்பதன்று; கடமையோடு ஒன்றுபட்டிருப்பது. உரிமை வேறு, கடமை வேறு என்று ஆராய்ச்சிக்காகப் பிரித்துப் பார்க்கலாமே தவிர அனுபவத்தில் பிரித்துப் பார்க்க முடியாது. உண்மையில் இரண்டும் ஒன்றுதான். ஒன்றையே, ஒரு பக்கம் பார்த்தால் உரிமையாகவும், மற்றொரு பக்கம் பார்த்தால் கடமையாகவும் தெரிகிறது. பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் உபயோகிக்கிற கரும்பலகையை எடுத்துக்கொள்வோம். அதில் ஒரு பக்கத்தை மட்டும் வைத்துக்கொண்டு மற்றொரு பக்கத்தை விட்டுவிட முடியுமா? இதைப்போலத்தான் உரிமையும் கடமையும். இது சம்பந்தமாக மகாத்மா காந்தியின் வாசகங்கள் வருமாறு:—

> "கடமைகளைச் செய்வதிலிருந்து தான் உரிமைகள் புறப்படுகின்றன."

* * *

> "நாம் செய்கிற ஒவ்வொரு கடமையும் ஒவ்வோர் உரிமையை நமக்கு நல்குகிறது. அப்படியே நாம் அனுபவிக்கிற ஒவ்வோர் உரிமையோடுங்கூட ஒவ்வொரு கடமை சேர்ந்திருக்கிறது."

மனிதன், சில உரிமைகளோடு பிறக்கிறனென்பது வாஸ்தவம். ஆனல் அந்த உரிமைகள், அவன் தனியாக இருக்கிறபோது பிரயோஜனமுடையனவாயிருப்பதில்லை; நான்கு பேரோடு[1] சேர்ந்து வாழத்

1 நான்கு பேரென்ருல், கணக்காக நான்கு பேர் என்று அர்த்தமல்ல. ஒரு சிலர் என்று சொல்வதற்குப் பதிலாக இப்படிச் சொல்வது ஒரு சம்பிரதாயம்.

தலைப்படுகிற போதுதான் பிரயோஜனமுடையனவா யிருக்கின்றன. இப்படி நான்கு பேர் சேர்ந்து வாழத் தொடங்குவதுதான் சமுதாயத்தின் ஆரம்பம். ஆகவே, மனித சமுதாயம் எப்பொழுது தோன்றியதோ அப்பொழுதே உரிமையின் வாழ்வும் தொடங்கி விட்டதென்று சொல்லவேண்டும்.

இங்ஙனம் மனித சமுதாயத்தோடு வாழ்வு தொடங்கிய உரிமையானது, மனித சமுதாயத்திற் குட்பட்டே நடமாடுகின்றது. அதாவது மனிதன், சமுதாயத்தில் ஒருவனாக இருக்கிறபோது தான் அவனுக்கு உரிமையுண்டு. சமுதாயத்திலிருந்து விலகி விட்டால் அவனுக்கு உரிமை கிடையாது. ஏனென்றால், சமுதாயத்திலிருக்கிற வரையில் தான் அவன்—மனிதன்—கடமையை உணர்கிறான். கடமையுள்ள இடத்தில்தானே உரிமை இருக்கும்? கடமை உணரப்படுகிற இடத்தில் தானே உரிமை செல்லுபடியாகும்?

மனிதன் யார்? பகுத்தறிவு படைத்தவன். இந்தப் பகுத்தறிவு படைத்திருப்பதன் காரணமாகவே அவன் சமுதாயத்தில் சேர்ந்து வாழ முற்படுகிறான். இப்படி முற்படுகிறபோது, சமுதாய நலனை நாட வேண்டியவனாயிருக்கிறான். சமுதாய நலனை நாடினால் தான் அவன் நலனடைய முடியும். சமுதாய நலனை நாடும் பொருட்டுச் சில கடமைகளைச் செய்கிறான். அதே சமயத்தில் தனது நலத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டுச் சில உரிமைகளை அனுபவிக்கிறான்.

கடமையென்பது என்ன? கொடுப்பது. அதாவது சமுதாயத்தின் க்ஷேமத்திற்காகத் தன்னுடைய சக்தியையோ, உழைப்பையோ, அறிவையோ, இப்படித் தன்னாலியன்ற ஏதேனுமொன்றைக் கொடுப்பது. உரிமை யென்பது என்ன? கொள்வது. அதாவது, தன்னுடைய க்ஷேமத்திற்காக, சமுதாயத்தினிடமிருந்து சில அனுகூலங்களை அல்லது சில பாதுகாப்புகளைப் பெற்றுக் கொள்வது. எந்த ஒரு விவகாரத்தி

[library stamp]

லும், எப்படி கொள்வதென்பதும் கொடுப்பதென்பதும் சேர்ந்தாற் போலவே இருக்கின்றனவோ அது போல, ஒரு சமுதாயத்திலும், கொள்வதாகிய உரிமையும், கொடுப்பதாகிய கடமையும் சேர்ந்தே இருக்கின்றன. இந்த இரண்டும் சேர்ந்திரா விட்டால் அந்தச் சமுதாயம் சரியான சமுதாயமில்லை. அதாவது கடமையைச் செய்யாமலும் உரிமையை அனுபவியாமலும் இருக்கிற மனிதர்கள், சமுதாயமாகச் சேர்ந்து வாழ முடியாது; அவர்களைச் சமுதாயத்தினர் என்று சொல்லவும் முடியாது. ஆகவே, மனிதன், சமுதாயத்திற்குட் பட்டிருக்கிற வரையில் தான், சமுதாயத்திற்குட் பட்டிருக்கிற காரணத்தினல்தான், உரிமையுடையவனுகை யிருக்கிறுன். சமுதாயத்தை மீறின உரிமை அவனுக்குக் கிடையாது.

கடமை உணரப்படுகிற இடத்தில் தான் உரிமை செல்லுபடியாகும் என்று மேலேசொன்னேமைல்லவா, இதனல் கடமை உணரப்படாத இடத்தில் உரிமை செல்லுபடியாகாது என்பது தெளிவாகிறது. உதாரணமாக, ஒரு காட்டுக்குள் நான் போகிறேன். காட்டுக்குள் போக எனக்கு உரிமையுண்டு. நிரம்ப சரி. ஆனல் அந்தக் காட்டுக்குள் வசிக்கும் கொடிய மிருகங்கள், என்னைக் கொல்லாதிருக்கக் கடமைப்பட்டிருக்கின்றனவா? அவைகளுக்குத் தங்கள் கடமை இன்னதென்று தெரியுமா? இப்படித் தங்கள் கடமையை உணராத விலங்குகள் மத்தியில் சென்று 'அவை என்னை வந்து தாக்குகின்றனவே, காட்டுக்குள் செல்லும் என் உரிமைக்குப் பழுது ஏற்பட்டு விட்டதே' என்று நான் கூக்குரலிடுவேனுகில், என் கூக்குரலுக்கு யாரேனும் செவி சாய்ப்பார்களா? அதற்கு ஏதேனும் அர்த்தம் இருக்கிறதா? என்னுடைய அறியாமைக்காக எல்லோரும் இரங்குவார்கள்; ஏளனமும் செய்வார்கள். எனவே, பகுத்தறிவு படைத்திருக்கிற, பகுத்தறிவு படைத்திருக்கிற காரணத்தினல் கடமையை உணர்ந்திருக்கிற மனிதர்கள் மத்தியில்தான் மனிதன், உரிமை கோர முடியும்; உரிமையை நிலை நாட்ட முடியும்.

எந்த ஓர் உரிமையும் சமூதாய நன்மையையே நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். சுய நன்மையை நோக்கமாகக் கொண்டிருப்பது உரிமையாகாது. என்னுடைய தேவையை மட்டும் பூர்த்தி செய்து கொள்ள நான் ஒன்றை அடைய விரும்புகிறேனென்று சொன்னால் அஃது உரிமையாகாது. அரசாங்கத்தினிடமிருந்து குடி நீர் வசதி பெற எனக்கு உரிமையுண்டு. வாஸ்தவம். ஆனால் அந்த வசதியை எனக்கு மட்டும் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அந்த உரிமையை நான் கோருவேனாயின், அதற்கு உரிமையென்ற பெயர் பொருந்தாது. என்னுடைய ஆசை அல்லது என்னுடைய கோரிகையென்றுதான் அதனைச் சொல்ல வேண்டும்.

உரிமை வேண்டுமென்று ஆசைப்படுவது இயற்கை. அப்படி ஆசைப்படவும் வேண்டும். ஆனால் அந்த ஆசை சுயநல ஆசையாயிருக்கக் கூடாது; பொதுநல ஆசையாயிருக்கவேண்டும். இங்ஙனம் பொதுநல எண்ணத்திலிருந்து, பொறுப்பு உணர்ச்சியிலிருந்து பிறப்பதுதான் உரிமை. அப்படியே எல்லோருக்கும் உபயோகப்படக்கூடியதாகவும் எல்லோருக்கும் அனுகூலம் தரத்தக்கதாகவும் இருப்பதுதான் உரிமை.

மற்றும், நான் கோரும் உரிமையானது, எனது சொந்த விருப்பத்தினின்று எழுந்ததாக மட்டும் இருந்தால் போதாது; சமுதாயத்தின் அங்கீகாரத்தையும் பெற்றிருக்கவேண்டும். சமுதாயத்தினால் நிராகரிக்கப்படுகிற எந்த ஓர் உரிமையும், அந்தச் சமுதாயத்திற்கு நன்மையை வாங்கித்தர முடியாதல்லவா?

நான் ஓர் உரிமையைக் கோருவதன் மூலம் சமுதாயத்திற்குச் சேவை செய்தவனாகின்றேன். சேவையென்ற கண் கொண்டுதான் உரிமையைப் பார்க்க வேண்டுமே தவிர வேறெந்தக் கண் கொண்டும் பார்க்கக்கூடாது. அப்படிப் பார்க்கப்படுவது உரிமையாகாது.

உரிமையானது ஜீவ் சக்தியுடையது; சதா சலித்துக்கொண்டிருப்பது. இதனால் அது வாழ்வையே நாடுகின்றது; வளர்ச்சி யடைந்து கொண்டே போகிறது. ஆக்கத்திற்குத்தான் உரிமையே தவிர தேக்கத்திற்கு அல்ல. அப்படியே வாழத்தான் உரிமையே தவிர சாவதற்கல்ல. இங்கே வாசகர்கள் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும். பிரதியொரு மனிதனுக்கும் அவனவன் உயிர்மீது உரிமையுண்டு. இதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் எந்த அளவுக்கு உயிர்மீது உரிமையுண்டு? அதனை வைத்துக்கொண்டிருக்கிற அளவுக்கு. அதாவது, உயிரை வைத்துக்கொண்டிருக்க, உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எனக்கு உரிமையுண்டே தவிர, உயிரைப் போக்கிக்கொள்ள எனக்கு உரிமையில்லை. அப்படிப் போக்கிக்கொளவேனுயின் அஃது உரிமை மீறின செயல்; தண்டனைக்குரிய குற்றம்.

என்னுடைய உயிரைப் போக்கிக்கொள்ளவே எனக்கு உரிமை யில்லாதிருக்கிறபோழ்து, மற்றவர்களுடைய உயிரைப் போக்க எனக்கு உரிமை யேது? தற்கொலை செய்துகொள்வதே குற்றமாகிறபோது, மற்றவர்களைக் கொலை செய்வது, அதைக்காட்டிலும் பெரிய குற்றமல்லவா? இதற்கு என்ன தண்டனை? கொலை செய்தவனுடைய உயிரைப் போக்கிவிடுவது தான். ஒருவனைக் கொலை செய்துவிட்டதன் மூலம் அவனுடைய உயிர் வாழும் உரிமையை எப்பொழுது ஒருவன் பறிமுதல் செய்துவிட்டானே அப்பொழுதே அவன், தன் உயிர் வாழும் உரிமையையும் பறி கொடுத்துவிட்டான். சமுதாயததில் ஓர் அங்கத்தினனயிருந்து உயிர் வாழ்ந்து கொண்டிருக்க அவனுக்கு உரிமை கிடையாது. இதனல்தான், கொலை செய்தவர்களை நியாயமான விசாரணைக்குட்படுத்தி, கொலைக் குற்றம் ருஜுவான பிறகு அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது.

உரிமைக்கும் உயிருக்குமுள்ள தொடர்பை வேறொரு கோணத்திலிருந்தும் பார்க்கலாம். மனித

ளுகப் பிறந்த பிரதியொருவனும் வாழக் கடமைப் பட்டிருக்கிருன். வாழ்வது ஒரு கடமை. இந்தக் கடமையைச் செய்யவே, அவனுக்கு, உயிரை வைத்துக்கொண்டிருக்கிற உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த உரிமையை எப்பொழுது அவன் காப்பாற்றிக்கொள்ள விரும்பவில்லையோ அப்பொழுதே அவன் வாழுங் கடமையைச் செய்ய விரும்பவில்லையென்று ஏற்படுகிறது. வாழ விரும்பாதவனுக்கு வாழ யோக்கியதை ஏது? தகுதி யில்லாதவனுக்கு எப்படி உத்தியோகம் கொடுக்கப்படுவதில்லையோ அப்படியே வாழத் தகுதியில்லாதவனுக்கு வாழ அனுமதி அளிக்கப்படுவதில்லை. மரண தண்டனை விதிக்கப்படுவதற்குக் காரணம் இதுதான்.

உரிமைகள், ஏற்கனவே சொன்னபடி வளருந் தன்மையன. புதிய புதிய உரிமைகள் ஏற்பட்டு நிலை பெறுதலுண்டு. குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு மட்டும் காட்டப்பட்டு வந்த சலுகைகள், நாளாவட்டத்தில் நிரந்தர உரிமைகளாதலும் கூடும். அப்படியே சில பழக்க வழக்கங்களும் காலக்கிரமத்தில் உரிமைகளாகி விடுகின்றன. காலதேச வர்த்தமானங்களையொட்டி உரிமைகள் சுருங்குதலும் விரிதலும் இயல்பு. இந்த உரிமைகள் சுருங்கலாம்; விரியலாம். ஆனல் உரிமைகளே இல்லாமல் ஒரு மனிதனே அல்லது ஒரு சமுதாயமோ வாழமுடியாது. அப்படி வாழ்ந்தால் அது வாழ்வாகாது.

# 3. பிரஜைகளின் உரிமைகள்

ஜன ஆட்சியின்கீழ் வாழும் மக்களுக்கு இரண்டு விதமான உரிமைகள் உண்டு. ஒன்று, சமுதாய அங்கத்தினர் என்ற முறையில் அனுபவிக்கிற உரிமைகள். மற்றொன்று அரசியல் அங்கத்தினர் என்ற முறையில் அனுபவிக்கிற உரிமைகள். முன்னதை ஜன உரிமைகள் அல்லது சிவில் உரிமைகள் என்று அழைப்பர். பின்னதை அரசியல் உரிமைகள் என்று அழைப்பர். இரண்டையும் சேர்த்துப் பொதுவாக பிரஜா உரிமைகள் என்று அழைப்பதுமுண்டு.

சிவில் உரிமைகள் என்பன பிராணவாயு மாதிரி. இவை யிருந்தால்தான், மனிதன், தன்னிடம் இயற்கையாயமைந்துள்ள சக்திகளைவெளிப்படுத்தமுடியும்; எல்லா வகையிலும் மேலான வாழ்க்கையை நடத்த முடியும்; சமுதாயத்தின் உபயோகமுள்ள அங்கத்தினனு யிருக்கமுடியும். சுருக்கமாக, மனிதனுடைய உயிர் வாழ்க்கைக்கும் நல்வாழ்க்கைக்கும் இந்த உரிமைகள் இன்றியமையாதவை. இதனுல்தான் இவை, அடிப்படை உரிமைகள் அல்லது ஜீவாதார உரிமைகள் என்று அழைக்கப்பெறுகின்றன.

இந்த உரிமைகள் இருப்பதனுல், மனிதன், தன் இஷ்டப்படிக்குக் காரியங்களைச் செய்யலாமென்பது அர்த்தமில்லை. மற்றவர்களுக்கு எந்த விதத்திலும் தொந்திரவு இல்லாமல் இருக்கவேண்டும். அந்த வரம்புக்குட்பட்டு, இஷ்டப்படி காரியங்களைச் செய்ய அனுமதியளிப்பனவே இந்த உரிமைகள். உரிமைக்கு எல்லையுண்டு என்று முந்தின அத்தியாயத்தில் சொன்னது இந்த அர்த்தத்தில்தான். உரிமையென்றுசொன்னுல், கட்டுதிட்டமில்லாதது என்று அர்த்தமில்லை. கெடுதலை உண்டுபண்ணுதிருக்க வேண்டுமென்ற கட்டுப்பாட்டுக்குட்பட்டதுதான் உரிமை. இதைப் போகப் போக விஸ்தரித்துக்கொண்டு போவோம்.

என் விஷயத்தில் மற்றவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேனோ அப்படியே மற்றவர்கள் விஷயத்திலும் நான் நடந்து கொள்ளவேண்டும். இதே பிரகாரம், என்னுடைய உரிமைகளில் பிறர் தலையிடக்கூடாதென்று நான் எதிர்பார்ப்பதைப்போல் பிறர் உரிமையிலும் நான் தலையிடக்கூடாது. சுருக்கமாக என்னைப்போல் மற்றவர்களையும் நான் கருதவேண்டும். இப்படிக் கருதுகின்ற அளவுக்குட்பட்டு என் இஷ்டப்படி காரியங்களைச் செய்ய எனக்கு உரிமையுண்டு. இதுதான் உரிமையின் சாரம்.

ஒருவனுடைய உரிமையில் மற்றொருவர் தலையிடா வண்ணம் பாதுகாப்பதற்கும், அவரவரும் அவரவருடைய உரிமைகளை அனுபவிக்குமாறு செய்வதற்கும் ஒரு ஸ்தாபனம் அவசியம்; இந்த ஸ்தாபனத்திற்குச் சில அதிகாரங்களும் தேவை. ஸ்தாபனந்தான் அரசாங்கம்; அதிகாரங்கள்தான் சட்டதிட்டங்கள். பிறர் தலையீடின்றி அவரவரும் அவரவருடைய உரிமைகளை அனுபவிக்கலாமென்று ஒவ்வோர் அரசாங்கமும் தன் பிரஜைகளுக்கு உறுதியளிக்கிறது; உறுதியளிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இதை முன்னிட்டுத்தான், ஒவ்வொரு நாட்டு அரசியல் திட்டத்திலும், ஜீவாதார உரிமைகள் முக்கியமான இடம் பெற்றிருக்கின்றன.

இந்த ஜீவாதார உரிமைகள் என்னென்ன வென்பதை இனி வரிசைப்படுத்திக் காட்டுவோம்.

1. நபர் உரிமை: அதாவது மனிதனைக நடமாடும் உரிமை. இந்த உரிமை, மனிதனை, ஸ்தூலமாகப் பார்க்கிறது; அவனுடைய ஸ்தூல வடிவத்திற்குப் பாதுகாப்பாய் நிற்கிறது. எப்படி? நான் வீதி வழியே போய்க்கொண்டிருக்கிறேன். என்னை வந்து தாக்கவோ, என் தேகத்தைத் தங்களிஷ்டப்படிக்கு உபயோகப்படுத்தவோ, என் இஷ்டத்திற்கு நான் போய்க்கொண்டிருப்பதைத் தடுக்கவோ யாருக்கும் உரிமை கிடையாது. மற்றவர்களுடைய போக்கு

வரத்தில் நான் தலையிடாத வரையில், அல்லது என்னுடைய போக்குவரத்தினுல் சமுதாயத்தின் ஒழுங்குக்கும் அமைதிக்கும் பங்கம் ஏற்படாத வரையில், என் விருப்பப்படி போகவோ வரவோ எனக்கு உரிமையுண்டு. இந்த உரிமையை நான் அனுபவிக்கிற விஷயத்தில் சமுதாயத்தின் மற்ற அங்கத்தினர்களிடமிருந்தும், அரசாங்கத்தினிடமிருந்தும் பூரணப் பாதுகாப்பை எதிர்பார்க்க எனக்கு உரிமையுண்டு.

இங்ஙனமே அரசாங்க அதிகாரியாயிருந்தாலும், அவர், அரசாங்கத்தின் உத்திரவில்லாமலோ அல்லது சட்ட ரீதியான காரணங் காட்டாமலோ என்னைக் கைதியாக்கிக் கொண்டுபோக உரிமை கிடையாது. அப்படி அகாரணமாகக் கைதியாக்கப்படுவேனுயின், அதற்குச் சட்டத்தின் மூலமாகப் பரிகாரம் பெற எனக்கு உரிமையுண்டு.

பலாத்காரத்தை உபயோகித்தோ அல்லது பலாத்காரத்தைக் குறிக்கும் சமிக்ஞைகள் செய்தோ என்னை அடக்கவோ, தங்கள் வசப்படுத்தவோ யாருக்கும் உரிமை கிடையாது. பலாத்காரஞ் செய்யப்படாமலிருக்க எனக்கு உரிமையுண்டு. அப்படி பலாத்காரஞ் செய்யப்பட்டால், அந்த பலாத்காரத்தினின்று காப்பாற்றிக்கொள்ள எனக்கு உரிமையுண்டு. இதற்குத் தற்காப்பு உரிமையென்று பெயர்.

தேகாரோக்கியத்திற்காகவோ, மன நிம்மதி பெறுவதற்காகவோ, என் தாய் நாட்டின் எல்லைக்குள், என் இஷ்டப்பட்ட இடத்திற்குச் சென்று வசிக்க எனக்கு உரிமையுண்டு. அதை யாரும் தடை செய்ய முடியாது.

நபர் உரிமை என்ற தலைப்பின் கீழ்ச் சொல்லப்பட்ட இந்த உரிமைகள் யாவும், மனிதனுடைய தனித்தன்மை காப்பாற்றப்படுவதற்குத் துணையாயிருக்கின்றன.

2. எண்ண உரிமை: பகுத்தறிவு படைத்த மனிதன், எண்ணமலோ, சிந்தனை செய்யாமலோ

இருக்க முடியாது. என் அறிவுக்கேற்ற வகையில், என் மனப் பக்குவத்திற்குத் தகுந்தபடி எண்ணவோ, சிந்திக்கவோ எனக்குப் பூரண உரிமையுண்டு. ஆனல் நீங்கள் கேட்கலாம், 'உங்கள் வீட்டுக்குள்ளேயே நீங்கள் இருந்து கொண்டு உங்கள் மனம் போனபடி எண்ணிஞலோ சிந்தனை செய்தாலோ, அதனல் யாருக்குச் சாதகமோ; பாதகமோ உண்டாகப் போகிறது? உங்கள் மனதுக்குள்ளேயே நிகழ்வதை யார் பார்க்க முடியும்? யார் தடை செய்ய முடியும்? இதற்கு உரிமை யென்ற பெயர் எப்படிப் பொருந்தும்?' என்று. எண்ண உரிமை யென்பது எண்ண அளவோடு நிற்பதில்லை. எண்ணியதை, ஏதோ ஒரு வகையில் சொல்ல வேண்டும்; சொன்னதைச் செய்கையில் கொண்டுவர வேண்டும். அப்பொழுது தான் அந்த எண்ணத்திற்குச் சக்தி ஏற்படுகிறது. இந்தச் சக்தி, பிரதியொரு மனிதனுக்கும் இயற்கையாகவே அமைந்திருக்கிறது. இதனை யாரும் பறிக்க முடியாது; மனிதனிடமிருந்து பிரிக்கவும் முடியாது. எண்ண உரிமையின் தாத்பரியம் இது தான்.

3. பேச்சுரிமை: எண்ண உரிமையின் தொடர்ச்சி தான் இந்தப் பேச்சுரிமை. என், அதன் வெளித் தோற்றம், அதன் ஒலி வடிவம் என்று கூறலாம். எந்த ஒரு பிரச்னையைப் பற்றியும் எந்த விதமான அபிப்பிராயங் கொள்ளவும், அந்த அபிப்பிராயத்தை வாய்ப் பேச்சால் வெளியிடவும், அந்த அபிப்பிராயத்தைப்பற்றி மற்றவர்களோடு தர்க்கஞ் செய்யவும், அதனை மற்றவர்களுக்குப் போதிக்கவும் பிரதியொரு மனிதனுக்கும் உரிமையுண்டு.

இந்த எண்ண உரிமை, பேச்சுரிமை இரண்டும், மற்றெல்லா உரிமைகளுக்கும் அஸ்திவாரம் போன்றவை. ஆதி காலத்திலிருந்து, இந்த உரிமைகளுக்காகத் தங்கள் உயிரையும் பறி கொடுத்திருக்கிருர்கள் எத்தனையோ மகான்கள்? ஏனென்ருல், உயிரைக் காட்டிலும் இந்த உரிமைகள் முக்கியமானவை யென்று கருதப்பட்டு வந்திருக்கின்றது.

4. எழுத்துரிமை: எண்ண உரிமையையும், பேச்சுரிமையையும் தொடர்ந்தது தான் இந்த எழுத்துரிமை. என்னுடைய எண்ணங்களை, என்னுடைய கருத்துக்களை எழுத்திலே கொண்டுவர எனக்குப் பூரண உரிமையுண்டு. அதாவது, பத்திரிகைகளில் எழுதுதல், பிரசுரங்கள் வெளியிடுதல் ஆகிய உரிமைகள் பிரதியொரு மனிதனுக்கும் உண்டு.

5. சங்கமாகச் சேர்ந்து கொள்ளும் உரிமையும் கூட்டமாகக் கூடும் உரிமையும்: பொதுஜன அமைதிக்கு விரோதமில்லாமல், எந்த ஒரு சங்கத்தையும் அல்லது எந்த ஒரு ஸ்தாபனத்தையும் ஆரம்பிக்கவோ, நடத்தவோ, ஏற்கனவேயுள்ள ஒரு சங்கத்தில் அங்கத்தினனாகச் சேர்ந்து உழைக்கவோ எனக்கு உரிமையுண்டு. அதே பிரகாரம், நான்கு பேரைச் சேர்த்து வைத்துக் கொண்டு ஒரு கூட்டம் நடத்தவோ, நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ளவோ எனக்கு உரிமையுண்டு.

6. சொத்துடைமை உரிமை: பிரதியொரு மனிதனும், தனது அன்றாட வாழ்க்கையை ஒழுங்காகவும், கண்ணியமாகவும், நிம்மதியாகவும், பிறருக்கு பளுவாயில்லாமலும் நடத்திவரக் கடமைப்பட்டிருக்கிறான். இந்தக் கடமையைச் செய்துவர ஓரளவு சொத்துக்கள் இருக்க வேண்டியது அவசியமாகும். இந்தச் சொத்துக்கள், நிலபுலங்களாகவோ, வீடு வாசல்களாகவோ, ஆடு மாடுகளாகவோ, எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். இவை எப்படியிருந்த போதிலும், ஓரளவுக்குட்பட்ட சொத்துக்களுடையவனாயிருக்க பிரதியொருவனுக்கும் உரிமையுண்டு. சொத்துக்களுக்குடையவனா யிருப்பதோடு மட்டுமல்ல, இவை, பறிமுதல் போகாவண்ணம் பாதுகாத்துக் கொள்ளவும் உரிமையுண்டு. இது மேலே சொன்ன தற்காப்பு உரிமையின் பாற்படும்.

7. நம்பிக்கை யுரிமை: எனக்கு இஷ்டமான மதத்தின் மீது நம்பிக்கை கொள்ளவோ, அந்த மதத்திலே ஒருவனாயிருக்கவோ எனக்கு உரிமையுண்டு.

இங்ஙனமே எனக்கு இஷ்டமான தெய்வங்களை, எனக்கு இஷ்டப்பட்ட முறையில் வணங்க எனக்கு உரிமையுண்டு.

8. உழைப்பு உரிமை: எனது அறிவு வளர்ச்சி, மனப்பாங்கு இவைகளுக்கேற்றாற் போலவும், எனது தேகசக்தி, தொழில் திறமை இவைகளுக்குத் தகுந்தாற் போலவும் உழைக்க எனக்கு உரிமையுண்டு. இந்த உழைப்புக்குத் தகுந்தபடி தினசரிக் கூலியாகவோ, மாதவாரிச் சம்பளமாகவோ ஏதோ ஒரு விதத்தில் ஊதியம் பெற எனக்கு உரிமையுண்டு.

9. நியாய உரிமை: நியாய ஸ்தலங்களில் சட்ட முறைப்படி விசாரணை கோரவோ, நியாயம் பெறவோ எனக்கு உரிமையுண்டு.

இவை யாவும் முக்கியமான ஜீவாதார உரிமைகள். ஜனஆட்சிக்குட்பட்ட ஒவ்வொரு நாட்டு அரசியல் திட்டத்திலும் இவை இடம் பெற வேண்டியது அவசியமாகும்; அப்படியே இடமும் பெற்றிருக்கின்றன. இவை தவிர, வேறு சில உரிமைகளும், ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாக, அதாவது ஜனங்களின் தகுதி, அரசாங்கத்தின் சக்தி, ஜனங்களுக்கும் அரசாங்கத்துக்குமுள்ள உறவு ஆகிய இவைகளை அனுசரித்து, இந்த ஜீவாதார உரிமைகளின் வரிசையில் சேர்க்கப் பட்டிருக்கின்றன. உதாரணமாக, சில நாடுகளில், இலவசக் கல்வி பெற ஜனங்களுக்கு உரிமையுண்டு. இன்னுஞ் சில நாடுகளில், கிழவர்கள், நோயாளிகள், வேலை செய்யச் சக்தியற்றுப் போனவர்கள் ஆகிய இப்படிப்பட்டவர்கள், தங்கள் வாழ்க்கைச் செலவுக்காக ஒரு தொகையை அரசாங்கத்திடமிருந்து பெற உரிமையுடையவர்களா யிருக்கிறார்கள். வேறு சில நாடுகளில், இலவசமாக வைத்திய உதவி பெற ஜனங்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. இவை போன்ற இன்னும் பல உரிமைகளும், ஏற்கனவே சொன்னபடி ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு விதமாக ஜனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இவை தவிர அவ்வப்பொழுது புதிய புதிய உரிமை

களையும் சட்ட புத்தகத்தில் சேர்ப்பித்து அரசாங்கத்தை அமுலுக்குக் கொண்டு வரச் செய்ய, ஜன ஆட்சிக்குட்பட்ட பிரதி யொரு நாட்டுப் பிரஜைகளுக்கும் உரிமையுண்டு.

இனி, அரசியல் உரிமைகளைப்பற்றிச் சிறிது கூறுவோம். ஆளுகையில் பங்கு கொள்கின்ற உரிமைகளைத்தான் பொதுவாக அரசியல் உரிமைகள் என்று அழைப்பர். பங்கு கொள்வதென்பது ஒரு விதமாக வல்ல; பல விதங்களாக. இதனால்தான் அரசியல் உரிமைகள் என்று பன்மையாக அழைக்கப்படுகின்றன.

இந்த அரசியல் உரிமைகள் என்னென்ன?

1. பிரதிநிதி சபையென்று அழைக்கப்படுகிற சட்ட சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கிற உரிமை; அதாவது ஓட்டுரிமை.

2. சட்ட சபையில் பிரதிநிதியாயமர்ந்து சட்டங்களியற்றுவதில் பங்கு கொள்ளும் உரிமை.

3. அரசாங்க நிருவாகத்தில் பங்கு கொள்ளும் உரிமை. அதாவது அரசாங்க உத்தியோகஸ்தராயிருந்து அலுவல் பார்க்கும் உரிமை.

4. அரசாங்கத்தின் குறைநிறைகளைப் பகிரங்கமாகப் பரிசீலனை செய்யும் உரிமை; அதாவது, ஜனங்களுக்கு நன்மை தருவது எது தீமை பயப்பது எது என்பதை, சொந்த விருப்பு வெறுப்பு இல்லாமலும், சொந்த நலனைக் கருதாமலும், வாய்மொழி மூலமாகவோ எழுத்து மூலமாகவோ எடுத்துச் சொல்லி அரசாங்கத்திற்கு வழி காட்டும், அரசாங்கத்தைத் திருத்தும் உரிமை.

5. அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு நடக்கிற வரையில், அரசாங்கத்திற்கு விரோதமாக நடந்து கொள்ளாத வரையில், தேசத்திலேயே நிரந்தர வாசம் செய்ய, அதாவது தேசப் பிரஷ்டம் செய்யப்படாதிருக்க ஒவ்வொரு பிரஜைக்கும் உரிமையுண்டு.

6. தொழில் நிமித்தமாகவோ, வேறு காரணங்களுக்காகவோ ஒரு பிரஜை, தனது நாட்டை விட்டு

வெளி நாட்டில் சென்று வசிக்கும்படி நேரிட்டால், அப்பொழுது தனது அரசாங்கத்தின் பாதுகாப்பைப் பெற அந்தப் பிரஜைக்கு உரிமையுண்டு. அதாவது ஒருவன், எந்த நாட்டுப் பிரஜையோ அந்த நாட்டுப் பிரஜையாகவே வெளி நாட்டில் இருக்கிறபோதும் கருதப்பட்டு, அதற்குரிய பாதுகாப்பைப் பெற உரிமையுடையவன் என்பது அர்த்தம்.

ஏற்கனவே சொல்லியிருக்கிறபடி, ஓட்டுரிமையுடையவர்களெல்லோரும் இந்த அரசியல் உரிமைகளுடையவர்களே. இந்த உரிமைகளை அடைகிற விஷயத்திலும் அனுபவிக்கிற விஷயத்திலும் சம அந்தஸ்தும் சம சந்தர்ப்பமுமுடையவர்களே. எந்த விதமான பாகுபாடும் இது விஷயமாக இருத்தல் கூடாது.

முந்திச் சொன்ன ஜீவாதார உரிமைகளும், பிந்திச் சொன்ன அரசியல் உரிமைகளும், ஒரு ராஜ்யத்தின் சட்ட திட்டங்களால் அங்கீகரிக்கப் பட்டிருப்பதாலும், அந்தச் சட்ட திட்டங்களினால் பாதுகாக்கப் பெறுவதாலும், இவற்றைப் பொதுவாக சட்ட ரீதியான உரிமைகளென்று அழைப்பர். முந்திய உரிமைகள், ஆளுகைக்குட் பட்டவர்கள் என்ற ஹோதாவில் ஜனங்களால் அனுபவிக்கப்படும் உரிமைகள்; பிந்திய உரிமைகள், ஆளுகையை நடத்துகின்றவர்கள் என்ற ஹோதாவில் அதே ஜனங்கள் அதே சமயத்தில் அனுபவிக்கின்ற உரிமைகள். ஒரு பிரஜைக்கு ஒரே சமயத்தில் இரண்டு விதமான உரிமைகளுண்டு என்பதை இங்கு வாசகர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

இந்த இரண்டு வித உரிமைகளைத் தவிர, ஜனங்களுக்கு மற்றொரு விதமான உரிமையும் உண்டு. இது கடைசி பட்சமாகக் கையாளப்பட வேண்டிய உரிமை. இதனை எதிர்ப்பு உரிமையென்று சொல்லலாம்.

ஓர் அரசாங்கத்தினால் அதிகமான தீமைகள் ஏற்பட்டு, அந்தத் தீமைகள் சகிக்க முடியாத அளவை அடைந்து விடுமானால், வேறு முறைகளினால் அந்தத்

தீமைகளுக்குப் பரிகாரங் காணமுடியா விட்டால், அந்த அரசாங்கத்தை அப்புறப்படுத்திவிட்டு, அதற்குப் பதில், நன்மை பயக்கும் வேருேர் அரசாங்கத்தை ஸ்தாபிக்க ஜனங்கள் முயற்சி செய்கிருர்கள். அரசாங்கத்தை மட்டுமென்ன, ஆட்சி முறை கெடுதலாயிருந்தால் அதனைக்கூட அகற்றிவிட் டுவேருேர் ஆட்சி முறையை அமைக்க முயற்சி செய்கிருர்கள். இந்த முயற்சிக்குத்தான் புரட்சியென்று பெயர். இப்படிப் புரட்சி செய்ய ஜனங்களுக்கு உரிமையுண்டு.

ஆனல் புரட்சி செய்து, இருக்கப்பட்டதை அழித்துவிடுவதோடு திருப்தியடையக் கூடாது. அது புரட்சியுமாகாது. புரட்சியானது அழிவை நோக்கமாகக் கொண்டதல்ல; ஆக்கத்தையே நோக்கமாகக் கொண்டது. அழிக்கப் பட்டதற்குப் பதில் நல்லதாக ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும். இது ஜனங்களுடைய கடமை. இந்தக் கடமையைச் செய்யும் சக்தி இல்லாதவர்கள், புரட்சியைப்பற்றி நினைக்கவே கூடாது. இந்தப் புரட்சி, பெரும்பாலும் ஆயுத பலத்தையே துணையாகக் கொண்டிருக்கிறது. இது பலாத்காரப் புரட்சி. உலக சரித்திரத்தின் நெடுகிலும் இத்தகைய பலாத்காரப் புரட்சிகள் நடைபெற்றிருப்பதையே பார்க்கிருேம். பலாத்காரப் புரட்சியினல் உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் அதிகம் உண்டாகின்றன. ஜனங்களுக்கு நல்லெண்ணம் இல்லாமற் போய் விடுகிறது; அதற்குப் பதில் குரோத புத்தி வளர்கிறது. கடைசியில் புரட்சி செய்தவர்களே, மற்ருெரு புரட்சியினல் அழிக்கப்பட்டு விடுகிருர்கள்.

இந்தப் பலாத்காரப் புரட்சிக்கு நேர்மாருனது மற்ருெரு புரட்சி. இதற்குச் சாத்விகப் புரட்சியென்று பெயர். ஆயுத பலத்தை இது துணையாகக் கொள்வதில்லை; தன்னுடைய பலத்தையே, அதாவது ஆத்ம பலத்தையே துணையாகக் கொள்கிறது. இதற்கு, அதிகாரத்தைக் காட்டிலும் அன்பே பிரதானம்; சொல்லைக் காட்டிலும் செயலே முக்கியம்;

தன்னுடைய நலத்தைக் காட்டிலும் மற்றவர்களுடைய நலத்தையே இது நாடுகிறது. அதற்காக, மற்றவர்களுடைய நலத்திற்காக, தான் எல்லாவித துன்பங்களையும் அனுபவிக்கிறது. இந்தத் துன்பங்களை, கொஞ்சம் கூட முகஞ் சிணுங்காமல், சிறிது கூட கோபதாபமில்லாமல், புன் சிரிப்புடன் அனுபவிக்கிற வயிரமுடைய நெஞ்சம் இதற்கு உண்டு. இது பார்வைக்கு அணுவளவாயிருந்தாலும் சக்தியிலே மகத்தானது.

இத்தகைய சாத்விகப் புரட்சிகள், உலகத்தின் பல பாகங்களில் அவ்வப்பொழுது சிறு சிறு அளவில் நடைபெற்று வந்திருக்கின்றன. பெரிய அளவில் நடைபெற்றது இந்தியாவில் தான். இது, சத்தியாக்கிரகம் என்றும், ஒத்துழையாமை என்றும், சாத்விக எதிர்ப்பு என்றும் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. இதனை ஆரம்பித்து நடத்தியவர் காந்தியடிகள்; வெற்றியும் கண்டார். இப்பொழுது நாம் சுய ஆட்சியின் கீழ் சுய அந்தஸ்துடையவர்களாக வாழ்ந்து கொண்டிருப்பதற்கு இந்தச் சாத்விகப் புரட்சி ஒரு முக்கியமான காரணம்.

இங்ஙனம் புரட்சி செய்யும் உரிமை, ஜனங்களுடைய அடிப்படையான உரிமைகளுள் ஒன்றாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. முதல் அத்தியாயத்தின் கடைசியில் எடுத்துக் காட்டப்பெற்ற அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தினுடைய ஒரு பகுதி வாசகம் வருமாறு:—

> "...........அரசாங்கங்கள், (ஜனங்களுடைய) உரிமைகளை அழிக்க முற்படுமானால், மேற்படி அரசாங்கங்களை மாற்றவும், அழிக்கவும் ஜனங்களுக்கு உரிமையுண்டு. அப்படி மாற்றியோ அழித்தோ ஆன பிறகு, தங்களுக்குப் பாதுகாப்பையும் சந்தோஷத்தையும் அளிக்கக் கூடிய ஓர் அரசாங்கத்தை ஏற்படுத்த அவர்களுக்கு உரிமையுண்டு."

# 4. பிரஜைகளின் கடமைகள்

பிரஜைகளின் கடமைகளைப்பற்றி நாம் அதிகம் சொல்லத் தேவையில்லை. ஏனென்றால், உரிமையின் மறுபுறந்தானே கடமை? உரிமைக்குச் சொன்ன தெல்லாம் கடமைக்கும் பொருந்தும். உரிமையை நியாயமான முறையில் கோருவதும், அனுபவிப் பதுமே கடமையல்லவா?

தன்னுடைய நலன் வேறு, அரசாங்கத்தினு டைய நலன் வேறு என்று கருதக்கூடாது. ஒரு பிரஜையின் தலையாய கடமை இது. தன்னுடைய நலனுக்கும் அரசாங்கத்தினுடைய நலனுக்கும் முரண்பாடு ஏற்படுமானால், அரசாங்கத்தினுடைய நலனுக்குத் தான் முக்கியத்துவம் கொடுக்க வேண் டும்; அதனைத்தான் நாட வேண்டும். தன்னுடைய நலனை விட்டுக் கொடுப்பதே ஒரு கடமை.

இங்ஙனமே ஒரு பிரஜை கொண்டாடும் ஓர் உரிமை, அரசாங்கமோ, சமுதாயத்தின் மற்ற அங் கத்தினர்களோ செய்ய வேண்டிய ஒரு கடமைக்கு இடையூறாயிருக்குமானால், அந்தப் பிரஜை, தன் உரி மையை வற்புறுத்தாதிருக்க வேண்டும்; ஏன், தன் உரிமையைப் புறக்கணித்து விட்டு, மற்றவர்கள் கட மையைச் செய்வதற்குத் துணையாயிருக்க வேண்டும். ஓர் ஊரில் தொத்து நோய் பரவியிருக்கிறது. இதனால் வெளியிடங்களிலிருந்து அங்கு யாரும் செல்லக் கூடாதென்றும் இதே பிரகாரம், அந்த ஊரிலிருந்து வெளியிடங்களுக்கு யாரும் செல்லக் கூடாதென்றும் அரசாங்கம் ஓர் உத்திரவு பிறப்பிக்கிறது. இந்த உத்தி ரவுக்குக் கட்டுப்பட்டு நடப்பது, உள்ளூர், வெளியூர் வாசிகளின் கடமை. என் தாய் நாட்டுக்குள் எங்கு வேண்டுமானாலும் செல்ல எனக்கு உரிமையுண்டு என்று சொல்லிக்கொண்டு, மேற்படி உத்திரவை மீறி நடப்பேனாயின், என் உரிமையை வற்புறுத்தின பெருமை எனக்கு உண்டாகாது; உரிமையை துஷ் பிரயோகம் செய்த குற்றந்தான் என்னைச்சாரும். தன்னுடைய பிரஜைகளின் உயிரைக் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அதை முன்

னிட்டே மேற்படி தடை யுத்திரவை அது பிறப்பிக்கிறது. நான் என் உரிமையை வற்புறுத்துவதன் மூலம், அரசாங்கத்தை, அதன் கடமையினின்று தடுத்தவனாகிறேன். ஆகவே, கடமைக்குத் தடை போட்ட குற்றமும் என்னைச்சாரும்.

நான்கு பேரைச் சேர்த்துக் கொண்டு ஒரு சங்கத்தை ஆரம்பித்து நடத்த எனக்கு உரிமையுண்டு. ஆனால் அந்தச் சங்கத்தை, அரசாங்கத்திற்கு விரோதமாக உபயோகப்படுத்தாதிருப்பது என் கடமை. அப்படி உபயோகப்படுத்துவேனாயின், எனது அரசாங்கத்திற்கே, எனது ஓட்டு மூலம் நிர்மாணமான அரசாங்கத்திற்கே நான் விரோதஞ் செய்தவனாவேன். இன்னும், பொதுஜனக் கூட்டமொன்றைக் கூட்ட எனக்கு உரிமையுண்டு. ஆனால் அந்தக் கூட்டம், பொதுஜன அமைதியைக் குலைக்கும் என்று அரசாங்கம் கருதி அதைத் தடுத்து விடுமானால் அந்தத் தடைக்கு உட்பட வேண்டியது எனது கடமை.

ஆகவே, பொது நன்மைக்காக, தன்னுடைய உரிமையை வலியுறுத்தாதிருப்பதும், விட்டுக் கொடுப்பதும், மற்றவர்களுடைய கடமையைச் செய்வதற்குத் தடையாயில்லாமலிருப்பதும் பிரதியொரு பிரஜையினுடைய கடமையுமாகும். இதனை எதிர்மறைக் கடமை யென்று கூறலாம்.

அரசாங்கத்தின் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது ஒரு பிரஜையின் முக்கியமான கடமை. கீழ்ப்படியாமல் அவரவரும் அவரவர் இஷ்டப்படி நடப்பாரானால் நாட்டில் கலகமும் குழப்பமுமே உண்டாகும். இதனால், நாடு சுய அந்தஸ்தை இழந்து அந்நியர் ஆட்சிக்குட்படுதல் கூடும். இது மிகவும் கேவலமன்றோ?

நாட்டின் க்ஷேமத்திற்காக அரசாங்கம் யுத்தத்தில் இறங்கும்படி நேரிட்டால், அப்பொழுது அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டியது பிரஜையினுடைய கடமை. ராணுவத்தில் சேர்ந்து உழைக்க

லாம்; வேறு விதங்களிலும் தன் சேவையை அரசாங்கத்திற்கு உதவலாம். நாட்டு நலனை முன்னிட்டு எல்லாவித தியாகங்களையும் செய்ய ஒவ்வொரு பிரஜையும் சித்தமாயிருக்க வேண்டும்.

உள் நாட்டில் அமைதி நிலவும் பொருட்டு அரசாங்கம் எடுத்துக் கொள்கிற சகல நடவடிக்கைகளிலும் ஒரு பிரஜை ஒத்துழைக்க வேண்டும். அப்பொழுது தான் அந்தப் பிரஜையினுடைய் அன்றாட வாழ்க்கை அமைதியாக நடைபெறும்.

தனது சொந்த வாழ்க்கையை ஒழுங்குள்ள வாழ்க்யைாக அமைத்துக் கொள்ள வேண்டியது ஒரு பிரஜையின் அவசியமான கடமை. ஒரு பிரஜை, எவ்வளவுக் கெவ்வளவு கல்வியறிவு நிரம்பியவனயிருக்கிறானோ, சீலமுள்ளவனயிருக்கிறானோ, அன்றாட வாழ்க்கையை நிம்மதியாக நடத்துகின்றவன யிருக்கிறானோ அவ்வளவுக் கவ்வளவு அந்தப் பிரஜையைக் கொண்ட ராஜ்யம் மேன்மையுடையதாயிருக்கிறது.

ஒரு பிரஜை, தனது நாட்டின் கலை, இலக்கியம், பண்பாடு, பரம்பரை இவற்றினைப் போற்றிப் பாதுகாக்கின்றவனாகவும், இவற்றை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டு போகிறவனாகவும் இருக்க வேண்டும். இன்னும், சமுதாயத்தின் கட்டுக் கோப்பு உடைந்து போகாமல் பாதுகாக்க வேண்டும் அதன் நிலையான அமைப்புக்குப் பாடுபட வேண்டும். இவை யாவும் ஒரு பிரஜை, சமுதாயத்தில் ஓர் அங்கத்தினன் என்ற முறையில் செய்ய வேண்டிய கடமைகள். இவைபோல் ஆளுகையில் பங்கு கொள்கிறவன் என்ற முறையில் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் சில உண்டு. அரசியல் உரிமைகள் என்று சொல்வது போல் இவற்றை அரசியல் கடமைகள் என்று சொல்லலாம்.

முதலாவது ஓட்டுச் செய்யுங் கடமை. தேர்தல் நடைபெறுகிறது. பொறுப்புள்ள ஒரு பிரஜை, ஏனோ தானோ என்று இருக்கக்கூடாது. அபேட்சகர்களாக நிற்கின்றவர்கள் யார் யாரென்று நன்கு ஆய்ந்து பார்த்து, யாரால் அதிகமான நன்மையுண

டாகுமென்று தெரிகிறதோ அவருக்கு ஓட்டுச் செய்ய வேண்டும்; அதாவது அவரைப் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்க வேண்டும்.

சரியான பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதென்பது சுலபமான காரியமன்று. இதற்கு, நாட்டின் அரசியல் அமைப்பு, சமுதாயத்தின் நிலைமை முதலியவைகளைப்பற்றி நன்கு தெரிந்து கொண்டிருக்க வேண்டும்; ஜனங்களோடு பழகி அவர்களுடைய குறை நிறைகளை உணர்ந்திருக்க வேண்டும்; அபேட்சகர்களின் தகுதிகளையும் அறிந்திருக்க வேண்டும். ஓட்டுப் போடுவதென்பது, பொறுப்புடன் செய்ய வேண்டிய ஒரு காரியம். இதில் நாம் சிறிது கவனக் குறைவுடன் நடந்து கொண்டால், நமக்கு நாமே தீங்கிழைத்துக் கொண்டவர்களாவோம்; நாட்டிற்கும் தீங்கிழைத்தவர்களாவோம்.

சரி; 'இப்படித் தவறாக இந்த ஓட்டுப் போடும் கடமையைச் செய்வதை விட, செய்யாமலே இருந்து விட்டால், அதாவது ஓட்டை உபயோகியாமல் இருந்து விட்டால் என்ன' என்று நீங்கள் கேட்கலாம். இது மிகவும் தவறு. ஒரு முறை தவறு செய்து விட்டால் மறு முறை திருந்திக் கொள்ளலாம். செய்யாமலே இருந்து விட்டால், நமது வாழ்க்கையின் ஒரு துறையை, முக்கியமான அரசியல் துறையை, நாமே தூர்த்து விட்டவர்களாவோம். தன்னுடைய உறுப்புக்களிலே ஒன்றை, தானே ஊனப்படுத்திக் கொள்கிறவனை என்னென்று சொல்வது? ஓட்டுரிமையை உபயோகியாதவன் அரசியலில் சிரத்தை கொள்ளாதவன். அப்படிப்பட்டவனுக்கு, அரசியலினால் ஏற்படுகிற பயன்களை அனுபவிக்க என்ன உரிமையுண்டு? நாம், நமது கடமையைச் செய்யாமலிருக்கிற பொழுது, மற்றவர்கள் மட்டும் அவர்கள் கடமையைச் செய்வார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்? ஆதலின், நம்முடைய நலத்திற்காகவேனும், நம்முடைய குடும்ப வாழ்க்கை முதலியன எவ்வித குறைபாடுகளும் இல்

லாமல் நடைபெற வேண்டுவதற்காகவேனும் நமது ஒட்டுரிமையை உபயோகிக்க வேண்டும். ஆனால் ஓர் அரசாங்கம், தனது பிரஜையினிடமிருந்து, இந்தக் குறைந்த பட்சக் கடமையை மட்டும் எதிர்பார்க்க வில்லை. குறைந்தபட்சக் கடமையாவது என்ன? தனது நலத்தை நாடுவதன் மூலம் நாட்டின் நலத்தை நாடுவது. ஆனால் நாட்டிற்காகவே நாட்டின் நலத்தை நாட வேண்டுமென்று தனது பிரஜைகளிடமிருந்து எதிர் பார்க்க ஓர் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

நாட்டின் நலத்தை முன்னிட்டு, பொறுப்புள்ள ஒரு பதவியை வகிக்க வேண்டுமென்று ஓர் அரசாங்கம், தனது பிரஜை யொருவனுக்கு ஆணையிடுகிறது. அந்தப் பிரஜை மனங்கோணமல் அந்தப் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதனால் அந்தப் பிரஜைக்கு, இடமாற்றம், வருமானக் குறைவு முதலிய சில அசௌகரியங்கள் ஏற்படலாம்; அவனுடைய சொந்த நலன்கள் பாதிக்கப்படலாம். ஆயினும் அவன், பொதுநலத்தை முன்னிட்டு அந்தப் பதவியை ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டவன்.

எந்த ஓர் அரசாங்கமும் பணமில்லாமல் நடைபெற முடியாது. இதற்காக அது ஜனங்களிடமிருந்து பலவிதமான வரிகளை வசூலிக்கிறது. இந்த வரிகளை ஒழுங்காகச் செலுத்திக் கொண்டுவர வேண்டியது ஒரு பிரஜையின் கடமை. வரிகளைக் குறைக்கவோ மாற்றவோ வேண்டுமென்று சொல்ல, கிளர்ச்சி செய்ய, பிரஜைக்கு உரிமையுண்டு. ஆனால் அந்தச் சொல்லினாலும் கிளர்ச்சியினாலும் பயன் ஏற்படுகிறவரை, அந்தப் பிரஜை, தனக்கு விதிக்கப்பட்ட வரிகளைச் செலுத்திக் கொண்டுவரவே வேண்டும்.

பொதுவாக அரசாங்கம், ஜனங்களுடைய நன்மையை முன்னிட்டும் நாட்டின் க்ஷேமத்திற்காகவும் அவ்வப்பொழுது பிறப்பிக்கிற உத்திரவுகளுக்குக் கீழ்ப் படிந்து நடப்பதும், அளிக்கிற கௌரவ பதவிகள் முதலியவற்றை ஏற்றுத் திறம்பட நடத்துவதும் பிரதியொரு பிரஜையின் கடமையுமாகும்.

# பி. ஜோ. பி. பிரசுரங்கள்

## சமீப வெளியீடுகள்

★

### வெ. சாமிநாத சர்மா எழுதியவை

| | | | | |
|---|---|---|---|---|
| அரசியல் வரலாறு | ... | 2 | 10 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | ... | 3 | 4 | 0 |
| ஸ்ரீ ராமகிருஷ்ணர்—ஒரு தீர்க்க தரிசி | ... | 2 | 4 | 0 |
| மானிட ஜாதியின் சுதந்திரம் | | 1 | 4 | 0 |
| ஆசியாவும் உலக சமாதானமும் | | 2 | 8 | 0 |
| ஐக்கிய தேச ஸ்தாபனம் | ... | 2 | 0 | 0 |
| ருஷியா-சரித்திர வரலாறு | ... | 1 | 8 | 0 |
| பிளேட்டோவின் அரசியல் | ... | 7 | 0 | 0 |
| அரசாங்கத்தின் பிறப்பு | ... | 0 | 8 | 0 |
| பிரஜைகளின் உரிமைகளும் கடமைகளும் | ... | 0 | 8 | 0 |
| அரசியல் கட்சிகள் | ... | 0 | 8 | 0 |
| ஸர் ஐஸக் நியூட்டன் | ... | 0 | 8 | 0 |
| சார்லஸ் டார்வின் | ... | 0 | 8 | 0 |
| தாமஸ் எடிஸன் | ... | 0 | 8 | 0 |

(தபாற் செலவு தனி)

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்
புதுக்கோட்டை
திருச்சி ஜில்லா

மற்றும் எல்லா புத்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

NH9

# வெ. சாமிநாத சர்மா எழுதிய இதுவரை வெளிவந்த நூல்கள்

பிளேட்டோவின் அரசியல்
அரசியல் வரலாறு
சுதந்திரத்தின் தேவைகள் யாவை?
அரசாங்கத்தின் பிறப்பு
பிரஜைகளின் உரிமைகளும் கடமைகளும்
அரசியல் கட்சிகள்
சமுதாய ஒப்பந்தம்
மாஜினி எழுதிய மனிதன் கடமை
மானிட ஜாதியின் சுதந்திரம்
ரூஸ்ஸோ
கார்ல் மார்க்ஸ்
கமால் அத்தாதுர்க்
ஹிட்லர்
முஸோலினி
அபிசீனிய சக்ரவர்த்தி
பண்டித மோதிலால் நேரு
லோகமான்ய திலகர்
மகாத்மா காந்தி
காந்தி யார்?
காந்தியும்—ஜவஹரும்
காந்தியும்—விவேகானந்தரும்
ஸ்ரீ ராமகிருஷ்ணர்—ஒரு தீர்க்கதரிசி
ரமண மஹரிஷி
சார்லஸ் டார்வின்
ஸர். ஐஸக் நியூட்டன்
தாமஸ் எடிஸன்
சி. வி. ராமன்
பிரபுல்ல சந்திர ரே
ஜகதீச சந்திரபோஸ்
சோவியத் ருஷ்யா
ருஷ்யா—சரித்திர வரலாறு
புதிய சீனா
பாலஸ்தீனம்
ஜெக்கோ ஸ்லோவேகியா
ஸ்பெயின் குழப்பம்
பிரிக்கப்பட்ட பர்மா
ஆசியாவும் உலக சமாதானமும்
ஐக்கிய தேச ஸ்தாபனம்
உலகக் கண்ணாடி
நமது ஆர்யா வர்த்தம்
சமஸ்தான இந்தியா
பெடரல் இந்தியா
இந்தியாவின் தேவை
சுதந்திர முழக்கம்
ஏப்ரல் 1919 அல்லது பஞ்சாப் படுகொலை
நமது பிற்போக்கு
கௌரீமணி
லெட்சுமிநாதன் (நாடகம்)
உத்தியோகம் ,,
பாணபுரத்து வீரன் ,,
அபிமன்யு ,,
மனோதர்மம் ,,
Essentials of Gandhism

112515

## இந் நூலாசிரியரின்

### சமீப வெளியீடுகள்

**ஆசியாவும் உலக சமாதானமும்**

உலகத்தில் சாசுவதமான சமாதானம் நிலவ வேண்டுமானால் அதற்கு ஆசியாதான் வழிகாட்ட வேண்டும், அப்படி வழி காட்ட வேண்டியதற்கான தகுதிகள் ஆசியாவிடமே இருக்கின்றன, உலகத்தில் இதுவரை ஏன் நிலையான சமாதானம் ஏற்படவில்லை, அப்படி ஏற்படுவதற்கு என்னென்ன செய்யப்பட வேண்டும், என்பனபோன்ற பல விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. அநேகம் படங்களடங்கி யிருக்கின்றன.

**ஐக்கிய தேச ஸ்தாபனம்**

ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் அமைப்பு விவரங்கள் நடைமுறைகள் முதலியன சுருக்கமாக இதில் கூறப்பட்டிருக்கின்றன.

**ருஷ்யா—சரித்திர வரலாறு**

இன்றைய ருஷ்யாவைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால், பழைய ருஷ்யாவின் சரித்திரத்தை அறிந்துகொள்வது அவசியமாகும். ருஷ்யாவின் சரித்திரம் ஆரம்பிக்கிற காலத்திலிருந்து கடைசி ஜார் — இரண்டாவது நிக்கோலாஸ் — முடியாட்சி வீழ்ச்சி அடைந்த வரை சுருக்கமாகவும், ஆனால் தொடர்ச்சியாகவும் இந் நூலில் ஆசிரியர் விவரிக்கிறார்.

கிடைக்குமிடம் :-

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்
புதுக்கோட்டை
திருச்சி ஜில்லா

இந் நூலாசிரியர் தமிழாக்கிய

# பிளேட்டோவின்

# அரசியல்

(இரண்டாம் பதிப்பு)

கிரேக்க அரசியல் ஞானியாகிய பிளேட்டோ வின் நூல்களில் இந்த அரசியல் சிறந்த தென்பர் அறிஞர். சம்பாஷணை வடிவமாயுள்ள இந்த நூலில், அரசியலின் ஒவ்வொரு பகுதி யும் தெளிவாக ஆராயப்படுகிறது. தனி மனிதனுடைய வாழ்க்கையும் சமுதாயத்தி னுடைய வாழ்க்கையும் எப்படி எப்படி அமைதல் வேண்டுமென்பது விளக்கிக் காட் டப்படுகிறபோது, வாசகர்களின் சிந்தனைச் சக்கரம் தானாக ஓட ஆரம்பிக்கும். ஒவ்வொரு வரும் ஆழ்ந்து படித்து அனுபவிக்க வேண்டிய நூல்.

டெம்மி 1×8 பக்கம் 336 விலை ரூ. 7—0—0

தபாற் செலவு தனி

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்

புதுக்கோட்டை

திருச்சி ஜில்லா